முற்பகல் 10-40

இதனைத் தடுப்பதற்குப் பல்வேறு வகைகளில் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகிறன்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

**திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஏதாவது இந்த விற்பனை முறையில் தரப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்சைன்மென்ட் டாக்ஸ் என்று சொல்லப்படுகிற பொழுது, குறிப்பாகத் தமிழக மாநிலத்திலிருந்து ஒரு உற்பத்தியாளர், தமது உற்பத்திப் பொருட்களை வேறு ஒரு மாநிலத்தில் விற்கிறார் என்று சொன்னால், அதை விற்பனையாக அல்லாமல் அந்த மாநிலத்திலிருக்கிற தன்னுடைய கிளை மூலம், அல்லது முகவரி மூலம் விற்பனை செய்கிறேன் என்று சொல்லி வரி ஏய்ப்பு செய்கிறார்கள். ஆனால் வெளி மாநிலத்தில் விற்கப்படுகிற பொழுது படிவ எண். எஃப் என்ற ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். அந்தப் படிவத்தில் உள்ள விவரங்களை முழுமையாக நிரூபணம் செய்வதற்கு அந்த வியாபாரிகள் வணிக வரித் துறைக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற வகையில் உயர்நீதிமன்றத்தில் இரண்டு நபர்கள் அடங்கிய நீதிபதிகள் குழு ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இப்போது வணிக வரித் துறை அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 71, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

**71—**

## சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

* ***46551***—திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

*1995 நவம்பர் 9]*

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*திருமதி கவிநிலவு தர்மராஜ்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்."

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது"

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்று வள்ளுவர் அளித்த குறள் மூலம் தெள்ளுத் தமிழிலே ஈடுபாடு கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் அவர்களைத் தங்கள் இதயத்திலே ஏற்றுக் கொண்டிருக்கிற, மொடக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த பேரூராட்சியான சிவகிரிக்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் நேசக் கரம் நீட்டி, ஆடை நெய்யும் தொழிலை மேற்கொண்டிருக்கிற நெசவாளர் குடும்பங்கள் இருப்பதற்கு இடம் இல்லாமல இருந்தாலும், நம் இதய தெய்வத்தை மட்டுமே தங்களுடைய இல்லத்திலும் இதயத்திலும் ஏற்றுக் கொண்டிருப்பதை உணர்ந்து, எங்களுடைய சிவகிரி பேரூராட்சியில் உள்ள மக்கள், நெசவாள மக்கள் பேருவுவகை கொள்ளக்கூடிய வகையிலே இதுவரை தமிழகத்தில் இல்லாத அளவுக்கு 380 வீடுகளை ஒரே தவணையிலே நெசவாளப் பெருங்குடி மக்களுக்குக் கட்டிக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் அதே பேரூராட்சிக்குத் தொகுப்பு வீடுகள் 100-ஐயும் கொடுத்து இதுவரை யாரும் செய்யாத அளவுக்குச் செய்து சரித்திரம் படைத்திருக்கிற அன்புத் தெய்வத்தின் மலர்ப் பாதங்களிலே மொடக்குறிச்சித் தொகுதியின் நெசவாள மக்களுடைய ஆனந்தக் கண்ணீர் மலர்களைக் காணிக்கையாக்கி, தொட்டால் துலங்கும், கை பட்டால் விளங்கும் என்று சொல்லக் கூடிய வகையில் புரட்சித் தலைவி அவர்கள் தொட்டால்தான் துலங்கும், அவர் கை பட்டால்தான் விளங்கும் என்று சொல்லக் கூடிய வகையிலே சரித்திரத்தைப் படைத்துச் சகாப்தமாக வாழ்ந்து கொண்டிருக்கிற அன்புத் தெய்வத்தினுடைய ஆட்சியிலே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சிவகிரி பேரூராட்சிக்கு கூட்டுறவு நூற்பு ஆலை

கொண்டுவரும் திட்டம் தற்போது அமலில் இல்லை என்ற பதிலை எடுத்து வைத்திருக்கிறார்கள். இல்லை என்று சொல்லுக்கு இலக்கணத்தையே அறியாத புரட்சித் தலைவியின் புனித ஆட்சியில் கிட்டத்தட்ட 6 ஆயிரம் கைத்தறிகளையும், ஆயிரக்கணக்கான விசைத் தறிகளையும் கொண்டிருக்கிற சிவகிரி பேரூராட்சிக்கு ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை அமைக்கின்ற திட்டத்தை மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் மொடக்குறிச்சி தொகுதி சிவகிரியில் ஏற்கனவே தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் 96 விசைத் தறிகளுடன்கூடிய விசைத் தறிக் கூடம் இயங்கி வருகிறது. அதுவே முழுமையாகப் பயன்படுத்தப்படுவதில்லை. தேவைப்பட்டால் விசைத் தறிக் கூடத்தை விரிவு படுத்துவதற்கு அரசு முன்வரும். அத்தோடு பெரியார் மாவட்டம் தாராபுரத்தில் 25,020 கதிர்களுடன் ஒரு கூட்டுறவு நூற்பாலை இயங்கி வருகிறது. அதைத் தவிர பெரியார் மாவட்டத்தில் 9 தனியார் நூற்பு ஆலைகளும் இருக்கின்றன. ஆகவே ஏற்கனவே இருக்கிற நூற்பு ஆலைகளை நஷ்டத்தில் இயங்காமல் பாதுகாப்பதையே அரசு முதன்மையானதாகக் கருதி இருப்பதால், புதிய நூற்பு ஆலைகள் அமைக்கின்ற வாய்ப்பு இல்லை. தனியார் யாராவது அமைக்க முன் வந்தால் அரசு உதவிகள் கொடுக்கும்.

முற்பகல் 10-45

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிவகிரி பேரூராட்சியில் இருக்கக்கூடிய பஞ்சாலை நிறுவனங்களைப் பற்றிய கருத்தை இங்கு வைத்திருக்கிறார்கள். அண்ணா பஞ்சாலை கூட்டுறவு நிறுவனங்களுடைய கதிர்கள்தான் இயக்கப்படாமல் பழையதாக இருக்கிற காரணத்தால் அங்கே நூற்பாலை ஒன்றை அமைப்பார்களேயானால், அடிக்கடி பெரியார் மாவட்டத்தில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் கரூருக்குச் சென்று நூல்களை வாங்க வேண்டிய நிலைமை இருக்காது. இதன் மூலமாக நெசவாளர்களுக்கு லாபமும், அரசுக்கு நஷ்டமும் ஏற்படுகிறது. அதுமட்டும் அல்லாமல், சிவகிரியைப் பொறுத்தவரை நூற்பாலைகளை அமைப்பதற்கான சகல வசதிகளும் சகல சூழ்நிலைகளும் தயாரான நிலையிலே இருக்கின்றன. தனியாரும் நூற்பாலைகளை அமைப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

*1995 நவம்பர் 9]*

அதற்கு உரிய நிலம் எவ்வளவு என்று சொன்னால், அதைக் கொடுத்து உதவுவதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த சிவகிரியிலே ஒரு நூற்பாலையை அரசு அமைக்குமேயானால் இது பெரியார் மாவட்டத்திற்கும் பெருமை தரக்கூடியதாக இருக்கும். நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிற நூற்பாலைகளைக் கருத்தில் கொண்டு, புதிய நூற்பாலைகளை அமைக்கிற திட்டத்தைத் தயவு கூர்ந்து ஒதுக்கிப் போடாமல் சிவகிரியிலே ஒரு புதிய நூற்பாலையை அமைப்பதன் மூலம் வருகிற வருமானத்தைக் கொண்டு, உபரி வருமானத்தைக் கொண்டு கூட, நஷ்டத்தை ஈடு செய்யக்கூடிய எண்ணத்தை அரசு மேற்கொண்டு, விரைவிலே வருகிற நிதியாண்டிலாவது சிவகிரியிலே தனியார் மூலமாவது ஒரு நூற்பாலை அமைத்திட அரசு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்திலே இருக்கிற தாராபுரம் நூற்பாலையிலேயே நெசவாளர்கள் நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதுவரை அப்படித்தான் பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் நெடுந்தூரம் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் சிறப்பாக, லாபத்திலே இயக்கினால், அந்த லாபத்தைக் கொண்டே சிவகிரியிலே புதிய நூற்பாலை துவக்குவதை அரசு பரிசீலிக்கும்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 72, திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

வினா எண் 73, திரு. கே. செலவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**73—**

## தனியார் கல்லூரி துவங்க நிலம் அளித்தல்

* ***16021*—*திரு. கே. செல்வராஜ்:***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கல்லூரி துவங்க முன்வருபவர்களுக்கு அரசு நிலம் அளிக்குமா?

(ஆ) இதுவரை தனியார் கல்லூரிகளுக்கு அரசு நிலம் அளிக்கப்பட்டுள்ளதா?